ஆய்வு செய்து, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு அதற்கான நடவடிக்கையை விரைவிலே எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 8, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. சோமசுந்தரம், மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

8—

சுற்றுச் சுவர்

***5640—திரு. வி. சோமசுந்தரம்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் தொகுதி, ஈஞ்சம்பாக்கத்திலுள்ள அரசு ஆதி திராவிடர் நல மேல்நிலைப் பள்ளிக்கு சுற்றுச் சுவர் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் தொகுதி, ஈஞ்சம்பாக்கம் அரசு ஆதி திராவிடர் நல மேல்நிலைப் பள்ளியின் சுற்றுச் சுவர் மொத்தம் 420 மீட்டர் ஆகும். அதில் நபார்டு வங்கி கடனுதவியுடன் 210 மீட்டர் நீளத்திற்கு சுற்றுச்சுவர் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. எஞ்சிய 210 மீட்டர் அளவுக்கு சுற்றுச் சுவர் அமைக்கப்பட வேண்டும். இதற்கு ரூபாய் 3.5 இலட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. எனவே, சுற்றுச் சுவர் கட்டாமல் காலியாக உள்ள 210 மீட்டர் நீளத்திற்கு மத்திய அரசின் ஆதி திராவிடர் நல துணைத் திட்டத்திற்கான சிறப்பு மைய நிதியுதவி திட்டத்தின்கீழ் பெறப்படும் 10 சதவிகிதம் நிதியிலிருந்து மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின்

நல்லாசியுடன் உடனடியாக சுற்றுச் சுவர் கட்டி முடிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. சோமசுந்தரம் அவர்கள்.*

திரு. வி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய அரசியல் வரலாற்றிலே எந்த ஒரு முதல்வரும் செய்யாத அற்புதமான திட்டத்தை முதன்முதலில் தமிழகத்தில் இளைஞர் நலன் காக்க காவல் துறையில் இளைஞர் படையை உருவாக்கி வரலாறு படைத்துக் கொண்டிருக்கின்ற (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் வாழும் வரலாறே, தங்களுடைய பாதங்களை வணங்கி, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஈஞ்சம்பாக்கத்திலே இருக்கின்ற ஆதி திராவிடர் நல மேல்நிலைப் பள்ளிக்கு சுற்றுச் சுவர் அமைத்துக் கொடுத்ததற்கு நெஞ்சார்ந்த நன்றியினை தொகுதி மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் தெரிவித்து அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.*

முற்பகல் 10-55

திரு. சு. ரவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் பொற்பாதம் பணிகிறேன். எனது அரக்கோணம் தொகுதிக்குட்பட்ட அரசு ஆதி திராவிடர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி மற்றும் அரசு ஆதி திராவிடர் பெண்கள் மேல்நிலைப் பள்ளிக் கட்டடங்கள் 1987 ஆம் ஆண்டு கட்டப்பட்டு தற்போது மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளன. தாழ்த்தப்பட்ட மக்களின் தாயாக விளங்கி வரும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில், மாண்புமிகு அமைச்சரவர்கள் அந்த இரண்டு பள்ளிகளுக்கும் புதியதாக பள்ளிக் கட்டடங்கள் கட்டித் தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

2012 அக்டோபர் 31]

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரக்கோணம் பகுதிக்காக ஏற்கெனவே என்னிடத்தில் மனு கொடுத்துள்ளார். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆலோசனை பெற்று, வரும் நிதியாண்டில் அந்தப் பள்ளிகளை சீர்செய்து மாற்றிக் கொடுப்பதற்கு ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.

திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி தொகுதி, திருத்துறைப்பூண்டி, அபிஷேககட்டளையில் சென்ற ஆண்டு மாண்புமிகு முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்ட ஆதி திராவிடர் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு சுற்றுச் சுவர் இல்லாத சூழல் இருக்கிறது. அந்தப் பள்ளியைச் சுற்றி விவசாய நிலங்களும், கருவைக் காடுகளும் உள்ளதால், அந்தப் பள்ளிக்கு பாதுகாப்பு தேவை என்பதைக் கருதி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சுற்றுச் சுவர் அமைத்துத் தர முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சுற்றுச் சுவர் அமைப்பதற்குக் கோரியுள்ளார். சுற்றுச் சுவர் அமைப்பதற்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்தே நிதி கொடுக்கலாம். இருப்பினும், மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று நிச்சயமாக இந்த ஆண்டில் அந்தச் சுற்றுச் சுவர் அமைப்பதற்கு ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. கந்தன் அவர்கள்.

திரு. கே.பி. கந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது சோழிங்கநல்லூர் தொகுதிக்கு உட்பட்ட பாலவாக்கம் கந்தசாமி நகர், ஆறாவது குறுக்குத் தெருவில் உள்ள ஆதி திராவிடர்

நடுநிலைப் பள்ளி பழுதடைந்து இருக்கிறது. அதைச் சரிசெய்ய அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன்தான் ஆதி திராவிடர் நலத் துறைக்கென்று அதிகப்படியான நிதியினை ஒதுக்கி, எங்கெல்லாம் பராமரிப்புப் பணிகள் செய்யப்படாமல் இருக்கின்றதோ அந்தப் பள்ளிகளையெல்லாம் எடுத்து பராமரிப்புப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்தப் பள்ளியையும் ஆய்வு செய்து அதற்கான நிதியை ஒதுக்கி இந்த ஆண்டே பராமரிப்பு செய்வதற்கு ஆவன செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 9, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

9—

சாலை விபத்துகள்

***165—டாக்டர் க. கிருஷ்ணசாமி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சாலை விபத்துகளால் ஏற்படும் உயிரிழப்புகளைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சாலை விபத்துகளைத் தடுக்கவும், விபத்துகளிலிருந்து விலை மதிப்பற்ற மனித உயிர்களைக் காப்பாற்றவும் மூன்று வகையான